செ.வெ.எண்.75 நாள்.07.02.2018.

திருநெல்வேலி, பாளையங்கோட்டை ப்ளாரன்ஸ் சுவைன்சன் காதுகேளாதோர் பள்ளியில் தமிழ்நாடு தேர்வாணையம் நடத்தும் குருப்–4 தேர்வில் மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு பயிற்சி வகுப்பு நடைபெற்று வருவதை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

–––––––

திருநெல்வேலி, பாளையங்கோட்டை ப்ளாரன்ஸ் சுவைன்சன் காதுகேளாதோர் பள்ளியில் தமிழ்நாடு தேர்வாணையம் நடத்தும் குருப்–4 தேர்வில் மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு பயிற்சி வகுப்பு நடைபெற்று வருகிறது. இப்பயிற்சி வகுப்பினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் இன்று (07.02.2018) நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

பாளையங்கோட்டை ப்ளாரன்ஸ் சுவைன்சன் காதுகேளாதோர் பள்ளியில் தமிழ்நாடு தேர்வாணையம் நடத்தும் குருப்–4 தேர்வில் மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு பயிற்சி வகுப்பு 03.01.2018 முதல் நடைபெற்று வருகிறது. இந்த சிறப்பு பயிற்சி வகுப்பில் 17 காதுகேளாதோர் மாணவ, மாணவிகளும், 3 மாற்றுத்திறனாளி மாணவ, மாணவிகளும், 5 பார்வையற்ற மாணவ, மாணவிகளும் என மொத்தம் 25 நபர்களுக்கு சிறப்பு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இப்பயிற்சி வகுப்புகள் சிறப்பு பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் மூலம் நடத்தப்பட்டு வருகிறது.

அதனைத் தொடர்ந்து, பாளையங்கோட்டை ப்ளாரன்ஸ் சுவைன்சன் காதுகேளாதோர் பள்ளியில் மாற்றுத்திறனாளிகளுக்கு மோட்டார் பொருந்திய தையல் இயந்திரங்கள் வழங்குவதற்கான தேர்வு செய்யும் பணிகள் நடைபெற்று வருகிறது. தேர்வு செய்யும் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்நிகழ்ச்சிகளில், மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் திருமதி.சாந்தி குளோரி எமரால்ட், மாவட்ட சமூக நல அலுவலர் திரு.இந்திரா, பள்ளி தலைமை ஆசிரியர் திரு.ஜான்சன் உள்பட அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.